

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

RHODE ISLAND TAMIL SCHOOL

ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி

# மார்ச் செய்திமடல்

பொருள்:

தன்னையே தோண்டினாலும் தோண்டுபவர் விழுந்துவிடாதபடி தாங்கும் நிலம் போல, தன்னை வார்த்தைகளால் அவமதிப்பவரையும் மதித்துப் பொறுப்பது முதன்மை அறம்.

As earth bears up with diggers too,
To bear revilers is prime virtue

## பள்ளியின் அறிவிப்புகள் !!

•பள்ளியின் ஆண்டு விழா போட்டிகள் வருகின்ற மே மாதம் 3 & 4 தேதிகளில் நடைபெற உள்ளன. (இதற்கான விபரங்கள் மிக விரைவில் தெரிவிக்கப்படும்)

•மூன்றாம் பருவத்தேர்வு மே மாதம் 17 ஆம் தேதி நடைபெற உள்ளது. (பள்ளி அட்டவணைப்படி)

## பள்ளிக் கண்மணிகளின் சித்திரங்கள் !!



அக்க்ஷரா சாய் விக்னேஷ்
நிலை 1

## பள்ளி அட்டவணை

| | | |
|---|---|---|
| 4/5/2024 | 31 | School Day 23 |
| 4/12/2024 | 32 | School Day 24 |
| 4/19/2024 | 33 | Spring recess for schools. Make up days |
| 4/26/2024 | 34 | School Day 25/ IN PERSON |

இணைப்புக் கண்ணி

http://tamilschoolcalendar/

## நிழல் உருவங்களுடன் பொருத்துங்கள் !




## நினைவு நாளேடு

### உலக மகளிர் தினம்

உலக மகளிர் தினம் ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் நாளன்று உலகமெங்கும் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

மகளிர் தினம் என்பது பெண்ணுரிமையை நிலைநாட்டுவதும், பாதுகாப்பதுமாகும். மேலும் பெண்களின் சாதனைகள் முழுமையாக அங்கீகரிக்கப்பட வேண்டும், அனைவராலும் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில், 1975ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் நாளை உலக மகளிர் தினமாக ஐ.நா. அங்கீகரித்தது.

### பணியாளர் பாராட்டு தினம்!

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் முதல் வெள்ளிக்கிழமை பணியாளர் பாராட்டு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஒரு நிறுவனத்துக்கு முக்கியமான மூலதனத்தை விட, ஊழியர்கள் மிக முக்கியம். இல்லாத மூலதனத்தை கூட ஊழியர்களால் பன்மடங்கு உருவாக்க முடியும். ஆனால், அதே அந்த ஊழியர்கள் மகிழ்ச்சியாக, நிறைவாக இல்லையென்றால் ஒரு நிறுவனத்தால் நீடித்து உழைக்க முடியாது. அப்படியான நிலை ஏற்படாமல் இருக்க ஊழியர்களின் கடின உழைப்பை அங்கீகரிக்க வேண்டும் என்று 1995ம் ஆண்டு டாக்டர் பாப் நெல்சன் என்பவரால் உருவாக்கப் பட்டதுதான் இந்த ஊழியர்கள் பாராட்டு தினம்.

### பூமி நேரம்!

பூமி நேரம் (எர்த் ஹவர்) என்பது உலகின் மிகப்பெரிய அடிமட்ட சுற்றுச்சூழல் இயக்கங்களில் ஒன்றாகும். இது ஒவ்வொரு ஆண்டும், கிரகத்திற்கு ஆதரவாக, மக்கள் மற்றும் உலகை ஒன்றிணைக்குமாறு, மார்ச் மாத இறுதியில் (இந்த வருடம், 23 Mar 2024 அன்று) , உலகெங்கிலும் உள்ள கோடிக் கணக்கான வீடுகளில், மின் சாதனங்களை அணைக்குமாறு ஊக்குவிப்பார்கள். இதில் நாம் அனைவரும் நம் பங்கை - பெரிய மற்றும் சிறிய வழிகளில் - செய்ய முடியும் என்பதை நினைவூட்டுகிறது.

## ரோஜாவும் பட்டாம்பூச்சியும்!

ஒரு காட்டுல ஒரு அழகான ரோஜா இருந்துச்சு. அதுக்கு ஒரு பட்டாம்பூச்சி நண்பரும் இருந்துச்சு.

ஒருநாள் வெளியில போன பட்டாம்பூச்சி திரும்பி வர்றப்ப, ரோஜா தேனீ கூட நட்பா இருக்குறத பார்த்துச்சு.




உடனே அந்த பட்டாம்பூச்சிக்கு ஒரே வருத்தமா போச்சு, உடனே அந்த ரோஜா கூட சண்டைக்கு போச்சு பட்டாம்பூச்சி. பொறாமையால் மனநிம்மதியையும் இழந்தது பட்டாம்பூச்சி.

அதுக்கு அந்த ரோஜா சொல்லுச்சு, நீ ஏன் நான் இன்னொருத்தர் கூட நட்பா இருக்குறத விரும்ப மாட்டுற? நான் சுரக்கிற தேன் எல்லாத்தையும் சேகரிச்சு மனிதர்களுக்கு கொடுத்து, நான் பிறந்த பிறவி பயனை அடைய செய்யுறது அந்த தேனியோட வேலை. ஆனா நீ அத பார்த்து பொறாமை படுறது சரி இல்லைனு சொல்லுச்சு.



அத கேட்ட பட்டாம்பூச்சி சொல்லிச்சு அடடா உன்னை பொறாமையால அவமதிச்சிட்டேன். எனக்கு தக்க தண்டனை கொடுன்னு சொல்லுச்சு.

அப்பத்தான் பொறாமை குணம் உள்ளவங்களுக்கு வெளியில இருந்து துன்பம் வர தேவையில்லை, அவுங்களோட பொறாமை குணமே அவுங்களுக்கு தண்டனைதானு திருவள்ளுவர் எழுதியிருக்கிற




<u>அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்<br>ஏதம் படுபாக்கு அறிந்து</u>

அப்படிங்கிற குரலை சொல்லுச்சு ரோஜா

நீதி : பொறாமை எண்ணமே ஒருவருக்கு தண்டனையாக அமையும்

## முத்தமிழ் முத்துக்கள்

### இசை: பாகம் 2
### யாழ்







பண்டையத் தமிழர் வாசித்த முதல் இசைக்கருவி யாழ். தமிழ் பண்பாட்டில் மிகச்சிறந்த இசைக்கருவியாக யாழ் விளங்குகிறது. இது ஒரு நரம்புக்கருவி. யாழ் படகு வடிவமாய், தணக்கு எனும் மரத்தால் செய்யப்பட்டு இருக்கும். யாழ் மீட்டுவதையே தொழிலாக உடையவர்களை யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் என்று மூன்று வகைப்படுத்துவர்.

யாழ் அரச அரங்குகளில் இருந்து அன்றாட சந்திப்புகள் வரை பல்வேறு சூழல்களில் தமிழ் மக்களால் வாசிக்கப்பட்டு, பண்டைய தமிழ் நாகரிகத்தின் செழுமையான இசை மரபை குறிக்கிறது.

சங்க இலக்கியங்களில் 24 வகையான யாழ்களைப்பற்றிக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. நரம்புக் கருவிகளின் வளர்ச்சிக்குக் காரணமான ஆதிக்கருவி யாழ் விளங்குகிறது. யாழ் கி.பி.9-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஓரிரு வேறுபாடுகள் கொண்டு வீணையாக வளர்ச்சி கண்டது.


## புறநானூறு



தீதும் நன்றும் பிறர் தர வாரா

-கணியன் பூங்குன்றனார்

RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி




நாம் உண்மையாக வாழ்வது என்றால், நம் கடமையைச் செய்வது என்று அர்த்தம்.

-மகாத்மா காந்தி

# மார்ச் செய்திமடல்

## குறுக்கெழுத்து போட்டி




குறுக்கெழுத்து போட்டியில் சொற்கள் மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும், இடமிருந்து வலமும், வலமிருந்து இடமும் உள்ளன. மொத்தம் 13 வினாக்கள் உள்ளன.

### மேலிருந்து கீழ்:

1. தாவரங்களில் பெரியது
2. மேலாடைக்கு வேறு பெயர்.
3. பாலைவன கப்பல்.
6. கசப்பாக இருக்கும் காய்
9. பால் தரும் விலங்கு.

### வலமிருந்து இடம்:

7. பொதி சுமக்கும் விலங்கு.

### கீழிருந்து மேல்:

5. அண்ணனுக்கு இளையவன்.
10. வேகமாக ஓடும் விலங்கு, சவாரி செய்ய பயன்படும்.
11. சுவரில் ஊர்ந்து செல்லும் விலங்கு

### இடமிருந்து வலம்:


1. பலாச்சுளையின் நிறம்.
4. காற்றில் பறக்க விடுவது.
8. நான்கு கால்கள் கொண்டவை. அமருவதற்கு பயன்படுவது.
9. ஏரிகளில் பயணம் செய்ய பயன்படுவது.

## செய்து பாருங்கள்

### கரடி



1. சதுரமான காகிதத்தை எடுத்துக் கொள்ளவும்.
2. அக்காகிதத்தை முக்கோண வடிவத்திற்கு மடிக்கவும்.
3. முக்கோணத்தின் இரண்டு கூரான பக்கங்களையும் உட்புறமாக மடிக்கவும்.
4. மடிக்கப்பட்ட இரு பக்கங்களின் நுனிப்பகுதியை மடிக்கவும்.
5. ஓரங்களை மடித்துத் திருப்பவும்.
6. கீழ்ப்பகுதியை மடித்து வாய், மூக்கு மற்றும் கண்களை வரையவும்.




## கண்டுபிடியுங்கள் !




## பிப்ரவரி விளையாட்டுப் போட்டிகளின் விடைகள்!

### குறுக்கெழுத்து போட்டி


| மேலிருந்து கீழ் | கீழிருந்து மேல் |
|---|---|
| 1. குழந்தை | 2. தலை |
| 5. சக்கரம் | 4. அம்பு |
| 6. சிங்கம் | 9. கடிகாரம் |

| இடமிருந்து வலம் | வலமிருந்து இடம் |
|---|---|
| 2. தங்கம் | 1. குயில் |
| 3. பந்து | 5. சங்கு |
| 7. காளை | 8. காகம் |
| 10. மாம்பழம் | |






### வார்த்தைகளை கண்டுபிடியுங்கள்



## மார்ச் மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :

மார்ச் மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடும் நம் பள்ளி செல்வங்களுக்கு, இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!




- அபினவ் விஜய்குமார்
- கேத்தரின் ஜெசிகா
- தக்ஷிதா கார்த்திகேயன்
- பவின் கிருஷ்ணன்
- பிரியங்கா ஸ்ரீராமன்
- யுகன் சபீந்திரன்
- விஹான் பாலமுரளி
- விஷ்ணு பிரகாஷ்
- ஷ்ரவிக்னா விஜய்



## தன்னார்வ குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| தலைவர் | - திரு. கார்த்திக் பாலசுப்பிரமணியன் |
| செயலாளர் | -. திரு. விஜயகுமார் சபாபதி |
| பொருளாளர். | - திருமதி. சாருலதா ரவிஷங்கர் |
| முதல்வர் | - திருமதி. ரமா சுப்பிரமணியன் |
| நிர்வாகி | -. திருமதி. சத்யப்பிரியா மாணிக்கவாசகம் |
| குறைதீர்க்கும் குழு | - அரவிந்த் பழனிசுவாமி, உண்ணாமலை முருகப்பன், கவிதா முருகேசன் |
| பள்ளிக்குழு | - ஐடா மெர்லின் ராஜகுமார், கண்ணன் ராஜசிங்கம், காமேஸ்வரி ராஜாராம், நித்யா வடிவேலு, பவித்ரா இரத்தினவேல், பிரகாஷ் முத்தையன், பிரதீபா முருகன், மனோத் ராஜகோபால், விஜய் ராஜேந்திரன், ஜெப்ரி ஜெயசிங் |

உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன:
கதைகள், கட்டுரைகள், வரைபடங்கள், விடுகதைகள், சிறு குறிப்புகள், குறுஞ்செய்திகள் போன்ற உங்கள் படைப்புகளை அடுத்த மாதம் 15-ஆம் தேதிக்குள் RITAMILSCHOOL@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

FB LINK: HTTPS://WWW.FACEBOOK.COM/RITAMILSCHOOL